# இந்தியத் தூதரகம்

## கொழும்பு

### ஊடக அறிக்கை

**தேசியத் தகுதிக்கான நுழைவுத் தேர்வு – *2019***

**(நீட் - பட்டப்படிப்பு) – *2019***

இந்தியாவில் சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சின் கீழ் மருத்துவ ஆணையம் / பல் மருத்துவ ஆணையத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மற்றும் பல் மருத்துவ கல்லூரிகளில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் ஆகிய கற்கை நெறிகளுக்காக தேசிய பரீட்சைகள் நிறுவகத்தினால் தேசியத் தகுதிக்கான நுழைவுத் தேர்வு – 2019 இற்கான இணைய வழி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ் நுழைவுத் தேர்வு தொடர்பான பரீட்சை பாடத்திட்டம், அனுமதிக்கான தகுதி எல்லை, பரீட்சைக் கட்டணம், பரீட்சை நிலையம் போன்ற மேலதிக விபரங்களினை WWW.ntaneet.nic.in எனும் இணையத்தள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியான 30 நவம்பர் 2018ற்கு முன்னதாக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட தகவல்கள் அனைத்தும் சரியானவையா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

கொழும்பு

நவம்பர் 12, 2018